அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 446/2014 RCOP: /

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.V.நாகேஸ்வரி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

வா.சா.1 30.01.2025

பெயர் உஷா தந்தை/ கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

<u>வாதிதரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:–

8. கிரையம் பத்தி பேசியதற்கு பிறகு வாதி வங்கியில் கடன் பெறப்போகும் விவரத்தை என்னிடம் தெரிவித்தார். அதற்கு வங்கியில் இருந்து ரூபாய் 26,16,226 அங்கிகரிக்க பட்ட விவரம்அவர் என்னிடம் தெரிவிக்கவில்லை. மேற்படி விவரம் பிராதில் தெளிவாக குறிப்பிட்டிருந்தபோதும் வங்கிகடன் அங்கிகரிக்கப்பட்ட விவரத்தை நான் எனது பதில்உரையில் குறிப்பாக மறுத்துசொல்லவில்லை நான் கவனிக்கவில்லை. வாதி எனது சொத்தின் வங்கிகடனுக்கு 22.05.2014, 20.06.2014, 24.06.2014, 11.07.2014, 12.07.2014, எனது சார்பாக வங்கியில் தவணை தொகை சுமார் 2,13,474 கட்டியுள்ளார் என்று சொன்னால் அவர் என்னிடம் தெரிவிக்காமல்

கட்டியுள்ளார் என்னிடம் கொடுத்திருந்தால் முன்பணத்தில் வைப்பு வைத்திருப்பேன்.

9. 22.08.2014 அன்று வாதி கிரையத்தை பதிவு செய்ய தயாராக இருப்பதாக எனக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்றால் அவ்வாறு எந்த கடிதமும் என்னால் வாங்கப்பட்டதாக எனக்கு ஞாபகம் இல்லை. 25.08.2014 அன்று வாதி அது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் எனது கணவருக்கு அது சம்மந்தமாக அழைப்பு வந்தது.

10. வாதி கிரைய ஒப்பந்ததின் படி கிரைய தொகையை செலுத்தி கிரையத்தை பதிவு செய்ய எப்போதும் தயாராக இருந்தார் நான் தான் அதிக தொகைகோரி பதிவு செய்ய மறுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல கிரையஒப்பந்த காலகட்டத்திற்குள் பதிவு செய்ய அவர் முன்வரவில்லை. எனது சொத்திற்கான வங்கிகடன் ஐசிஐசி யில் இன்னும் நிலுவையில் உள்ளது. அதற்கான தவணையை நான் தற்போது வரை செலுத்திவருகிறேன். தோராயமாக 18 லட்சம் ரூபாய் வங்கி கடன் உள்ளது.

11. ஸ்ரீராம் பைனான்ஸ்சில் நான் எதாவது கடன் வாங்கியிருந்தேனா என்றால் (மேற்படி கேள்விக்கு கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் அது சம்மந்தமான எந்த வாதுரையும் இல்லாதபோது மேற்படி கேள்வி வழக்கிற்கு சம்மந்தம் இல்லாதது என்று ஆட்சபணை தெரிவித்து இருந்தார் அதற்கு வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் பிரதிவாதிக்கு கடன் இருக்கும் காரணத்தினால் தான் வாதியால் ஏற்றதை நிறைவேற்று வழக்கு தாக்கல் செய்ய இயலவில்லை என்று ஆகவே இக்கேள்வி வழக்கிற்கு

சம்மந்தமானது என்று ஆட்சேபணை தெரிவித்தார். இந்நீதிமன்றம் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்து பார்க்கும் போது தாவாவானது நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்யப்பட்டது மேலும் வழக்கு தாக்கல் செய்யும்போது ஏற்கனவே ஆர்டர் 2 ரூல் 2 மனு தாக்கல் செய்யபடப்டு அனுமதிக்கப்பட்டுள்ளது ஆகவே மேற்படி கேள்வி வழக்கிற்கு சம்மந்தமானது என்று இந்நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கிறது.) 2013 ல் கடன் வாங்கியிருந்தேன்.

12. காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாரின் விசாணையின் போது எனது தரப்பில் எனது கணவர் ஆஜராகி பத்திரம் பதிவு செய்து தர இயலாது, வாங்கிய முன்பணத்தை வட்டியுடன் திருப்பிக்கொடுக்க தயாராக உள்ளோம் என்று தெரிவித்தார் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை தான் எனது பிரமாணவாக்கு மூலத்திலும் நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 29.12.2020 அன்று நான் வாதிக்கு ஒரு வழக்கறிஞர் அறிப்பு அனுப்பியதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் அது தற்போது எனது கையில் இல்லை. அந்த அறிவிப்பில் நான் முன்பணத்தை திருப்பிக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் குத்தகை காலம் முடிந்துவிட்டது ஆகவே குத்தகை தொகையை திருப்பிக்கெ்ாடுக்க தயாராக உள்ளதாக தான் குறிப்பிட்டுள்ளோம். அதற்கு மாறாக எனது பிரமாணவாக்கு மூலத்தில் கிரையமுன்பணத்தை திருப்பிகொடுப்பதற்கு தயாராக உள்ளதாக தான் பத்தி 15ல் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

13. தற்போது வரை ஐசிஐசிஐ வங்கியில் நான் வாங்கிய வீட்டுகடன் நிலுவையில் உள்ளதால் அதனை திருப்பி செலுத்தாமல் வீட்டை விற்க

இயலாது என்ற சொன்னால் சரிதான். ஆகவே வாதிகோரியுள்ளது போல வாதிக்கு நிரந்தர உறுத்துக்கட்டடை கிடைக்கபெற்று தாவா தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.